சுருக்கம்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3 – பாதாள சாக்கடைத் திட்டம் – ஈரோடு மற்றும் அருகாமையிலுள்ள நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமுல்படுத்த திருத்திய நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (2டி) எண்.248 நாள் :28.12.07

படிக்க :

1. அரசு ஆணை நிலை எண். 89 ந.நி.(ம)கு.வ.(நநி3) துறை நாள்.13.3.99
2. அரசு ஆணை (ப) எண். 27 ந.நி.(ம)கு.வ.(நநி3) துறை நாள்.27.1.06
3) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.40244/04/ UGSS 1, நாள் 18.12.07 மற்றும் 28.12.2007.

-----

ஆணை :

அனைத்து மாவட்ட தலைநகரங்களுக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமுல்படுத்த அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் 11.12.2006 அன்று நடத்திய மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில், ஈரோடு நகராட்சி மற்றும் அருகாமையிலுள்ள நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமுல்படுத்தப்படும் என அறிவிப்பு செய்துள்ளார்.

2) முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஈரோடு நகராட்சிக்கு இரண்டு கட்டமாக பாதாள சாக்கடைத் திட்டத்தினை ரூ.39.23 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டும், பல்வேறு காரணங்களால் அத்திட்டத்தினை செயல்படுத்த இயலவில்லை. அதனைத் தொடர்ந்து ஆலோசக நிறுவனத்தால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு மாநில ஒப்பளிப்பு குழுவின் 21.12.2005 நாளைய இரண்டாவது கூட்டத்தில் வைக்கப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டது. எனவே தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3–ன் கீழ் கீழ்க்கண்ட நிதிப்பங்கீட்டின்படி, பாதாள சாக்கடைத் திட்டத்தினை ரூ.35.63 கோடிக்கும் ,

செயல்பாடு மற்றும் பராமரிப்பு கட்டணம் ரூ.45.35 இலட்சத்திற்கும் செயல்படுத்த இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்ட மானியம் | : | ரூ. 10.00 கோடி |
| உள்ளாட்சி மற்றும் பொதுமக்கள் பங்கீடு | : | ரூ. 6.36 கோடி |
| தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் கடன் | : | ரூ.19.27 கோடி |
| மொத்தம் | : | ரூ.35.63 கோடி |

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் 11.12.2006 ஆம் நாளைய மாவட்ட ஆய்வின் போது, ஈரோடு மற்றும் நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளை இணைத்து, பாதாள சாக்கடைத் திட்டம் அமுல்படுத்தப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருத்திய மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியமானது.

3) மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவில், ஈரோடு நகராட்சி, வீரப்பன்சத்திரம், பெரியசேமூர், காசிபாளையம் மற்றும் சூரம்பட்டி ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு இப்பாதாளசாக்கடைத் திட்டத்தினை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் நியமிக்கப்படும் தனியார் ஆலோசக நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார். இதற்கு ஈரோடு நகராட்சி மற்றும் வீரப்பன் சத்திரம், பெரியசேமூர், காசிபாளையம் மற்றும் சூரம்பட்டி ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள் ஒப்புதலை அளித்துள்ளன. மேலும் அவசர அவசியத்தைக் கருதி வருகிற மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்புக் குழுவின் பின்னேற்பிற்கான குறிப்புகள் சமர்ப்பிக்கப்படும் என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

4) மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் , இத்திட்டத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் –3ல் கீழ்க்கண்ட நிதி ஆதாரம், செயல் முறையின் பராமரிப்பு மற்றும் நிதி நிலைப்பாடு ஆகியவை மூலம் செயற்படுத்த உள்ளதாக தெரிவித்துள்ளார்.

அட்டவணை – 1

நிதி பங்கீடு மற்றும் பராமரிப்பு

| நகராட்சியின் பெயர் | மானியம் (ரூ. கோடியில்) | உள்ளாட்சி மற்றும் பயனாளிகளின் பங்கீடு(ரூ கோடியில்) | த.நா.ந.வ.தி ,3 யின் கடன் தொகை(ரூ கோடியில்) | உள்ளூர் திட்ட குழும மானியம் (ரூ. கோடியில்) | கட்டுமானத்தின் போது வட்டி வீதம்(ரூ. கோடியில்) | மொத்த மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|---|
| ஈரோடு மற்றும் 4 நகராட்சிகள் | 10.00 | 61.89 | 71.14 | 3.60 | 7.37 | 154.00 |

அட்டவணை – 2
கட்டணவீதம்

| நகராட்சியின் பெயர் | சராசரி வைப்புத் தொகை | | சராசரி கட்டண வீதம் | |
|---|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் (ரூ) | வீட்டு உபயோக மல்லாத (ரூ) | வீட்டு உபயோகம் (ரூ) (ஒரு மாதத்திற்கு) | வீட்டு உபயோக மல்லாத (ரூ) (ஒரு மாதத்திற்கு) |
| ஈரோடு மற்றும் 4 நகராட்சிகள் | 7761.00 | 27467.00 | 113.00 | 392.00 |

5) ஈரோடு நகராட்சி , வீரப்பன்சத்திரம், பெரியசேமூர், காசிபாளையம் மற்றும் சூரம்பட்டி ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு மேலே அட்டவணை 1 மற்றும் 2 ல் உள்ள மதிப்பீட்டுத் தொகை, பராமரிப்புத் தொகை மற்றும் கட்டணவீத அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயற்படுத்த திருத்திய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் தனது கருத்துருவினை அரசிற்கு மேலனுப்பி வைத்துள்ளார்.

6) நகராட்சி நிர்வாக ஆணையரது கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது . அதனடிப்படையில் ஈரோடு நகராட்சி , வீரப்பன்சத்திரம், பெரியசேமூர், காசிபாளையம் மற்றும் சூரம்பட்டி ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு மேலே அட்டவணை 1 இல் உள்ள நிதிப் பங்கீடு மற்றும் பராமரிப்புத் தொகை, அட்டவணை 2ல் உள்ள கட்டணவீத அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு திருத்திய நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

அ) தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் (TNUIFSL) பரிந்துரைக்கப்பட்ட நிதி வழங்கும் வீதம், கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ஆகியவற்றை ஏற்பது குறித்து தேவையான தீர்மானங்கள் அந்தந்த நகராட்சிகளால் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆ) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தொழில்நுட்ப வகைப்பாடு (Technical type) முடிவு செய்யப்படாத நிலையில், அதனை முடிவு செய்யும் போது அத்தொகை அதிகப்படுமானாலும், தொழில்நுட்ப மாறுபாட்டால் இயக்கம் மற்றும் பராமரிப்பு கட்டண விகிதத்தில் மாறுதல் ஏற்படுமானாலும், அதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தால் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

இ) இவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திற்கான கடன் மானிய தொகையினை இறுதியாக்கம் செய்யும் போது கட்டணவிகிதம் மற்றும் வைப்புத்தொகை தொடர்பான வகைப்பாடு ஏற்பது குறித்தும் நகராட்சி மற்றும் கடன் வழங்கும் நிறுவனமும் முடிவெடுக்க வேண்டும்.

ஈ) மேற்காணும் திட்டத்திற்கான மாற்று தீர்மானங்கள் அந்தந்த நகராட்சியால் தேவைப்படும் இனங்களில் நிறைவேற்றப்பட்டு அதனை நகராட்சி நிர்வாக ஆணையர் மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்புக்குழுவின் முன் வைத்து திருத்திய நிர்வாக அனுமதியினைப் பெற வேண்டும்.

உ) செயலாக்கம் மற்றும் பராமரிப்பு ஆண்டு செலவினம் மற்றும் கட்டுமான காலத்தில் ஏற்படும் வட்டி உயர்வு, ஏனைய விலைவாசி உயர்வு ஆகியவற்றால் ஏற்படும் பற்றாக்குறையினை அந்தந்த நகராட்சிகளே தங்களது பொது நிதியிலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.(Standard condition).

7) இந்த ஆணை நிதித்துறையின் 27.12.2007 ஆம் நாளிட்ட அலுவல் சார்பற்ற எண்.4165/FS/P/2007 –ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை– 600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை–5.
முதன்மை நிர்வாக அலுவலர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், சென்னை–17.
ஆணையர் ,ஈரோடு நகராட்சி (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
செயல் அலுவலர், வீரப்பன்சத்திரம், பெரியசேமூர், காசிபாளையம் மற்றும் சூரம்பட்டி மூன்றாம் நிலை நகராட்சிகள் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை –108.
மாநில கணக்காயர், சென்னை –5.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை –18.
நிதித்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 2) துறை,சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 28/12/07
28-12-07